**செய்தி வெளியீடு**

**அளவீட்டு அறிக்கையினை வெளியிடுதல்**

**"இலங்கையில் சுய அறிக்கையிடப்பட்ட உடல் ஆரோக்கியம் சம்பந்தமான தேசிய அளவீடு 2014"**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

தொ.இல.: 011-2147459 தொ.ந.இல.: 011-2147447 ஜுலை 5, 2016

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஆனது "இலங்கையில் சுய அறிக்கையிடப்பட்ட உடல் ஆரோக்கியம் சம்பந்தமான தேசிய அளவீடு 2014" எனும் அளவீட்டிற்கான அறிக்கையினை கொழும்பில் 2016 ஜுலை 5ம் திகதி அன்று இடம்பெற்ற வைபவத்தில் உத்தியோக பூர்வமாக வெளியீட்டிருந்தது. இந்த வெளியீட்டு வைபவத்தில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான கலாநிதி ஏ. ஜே. சத்தரசிங்க அவர்கள் குடித்தன மட்டத்திலுள்ள நீண்டகால நோய்கள், திடீர் நோய்கள், மற்றும் வேறுசில முக்கியமான விடயங்களுக்கும் மிகவும் தேவைப்படும் சுகாதார புள்ளிவிபரங்களை பெறுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஆனது 2014 இல் வருடம் முழுவதற்கும் சுகாதாரத்திற்கான அளவீடொன்றினை நடாத்தியதாகக் கூறினார். இதுதான் அனேகமாக இலங்கையில் சுய அறிக்கையிடப்பட்ட உடல் ஆரோக்கிய நிலைமையின் முதலாவது நாடளவியரீதியிலான அளவீடாகும்.

அளவீட்டின்படி, சனத்தொகையில் 18 வீதமானோர் அல்லது கிட்டதட்ட ஆறில் ஒருவர் நீண்டகால நோய்கள் சிலவற்றை கொண்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஓட்டு மொத்த நோயின் காணப்படுகையானது பால், வயது, புவியியல் அமைவிடம், தொழில், கைத்தொழில் மற்றும் தொழில் தொகுதி உடன் வேறுபாடுகளைக் காட்டுகின்றது. நீண்டகால நோய்களானது நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கும் நோய்களாகும். இவ் ஆய்வில் கருதப்பட்ட நீண்டகால நோய்களானது நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்கள், பக்கவாதம், புற்றுநோய், ஆஸ்துமா, மனநோய், மூட்டுவாதம், வலிப்பு போன்ற நோய்களை உள்ளடக்குகின்றது. நீண்டகால நோயின் காணப்படுகையானது எதிர்பார்க்கக் கூடிய வகையில் வயதுடன் கூடிச் செல்கின்றது. அறுபது வயதிலும் கூடிய முதியோர்களில் அரைவாசிக்கும் (55%) அதிகமானோர் நீண்டகால நோய்கள் சிலவற்றை கொண்டவர்கள் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. 15 வயது மற்றும் கூடிய வயது கொண்ட சனத்தொகையின் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயின் காணப்படுகையானது முறையே 7 வீதமும் மற்றும் 9 வீதமும் ஆகும். தொழில் மற்றும் கைத்தொழில் வகைகளிற்கு இடையே நீண்டகால நோயின் தாக்கத்தில் வேறுபாடுகள் இருக்கின்றது. உதாரணமாக, நீரிழிவு (13%) மற்றும் உயர் இரத்த அழுத்தத்தின் (8%) உயர் காணப்படுகையானது மூத்த உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்களின் வகைகளுக்காக வெளியிடப் பட்டிருக்கின்றன. நீரிழிவு இன் உயர் காணப்படுகையானது (7%) கைத்தொழில் (4%) மற்றும் விவசாயம் (4%) ஆகிய பிரிவுகளில் ஒப்பிடுகையில் சேவைப் பிரிவுகளிலுள்ளவர்களுக்கே அறிக்கையிடப்பட்டிருக்கின்றன. புவியியல் ரீதியாக 15இலும் கூடிய வயதிலுள்ள சனத்தொகையில் நீரிழிவு இன் காணப்படுகையானது (11%) கொழும்பு மாவட்டத்திலே உயர்வாக இருக்கின்றது.

இவ் அறிக்கையானது மொத்த சனத்தொகையின் 15 வீதமானோர் அளவீட்டிற்கு முந்திய நான்கு கிழமைக்கான ஆய்வில் கருதப்பட்ட திடீர் நோய்களில் ஏதாவது ஒன்றிற்கான சிகிச்சையை பெற்றிருந்தனர் என காட்டுகின்றது. திடீர் நோய் என்பது மிக விரைவாக பீடிக்கின்றதும் மற்றம் குறுகிய காலத்தினையும் உடைய நோயுமாகும். திடீர் நோயானது 15 வயதிற்கு கீழுள்ள சிறுவர்களிற்கு இடையில் காணப்படும் மிகவும் பொதுவான நோயாகும். கிட்டத்தட்ட ஐந்து பிள்ளைகளில் ஒரு பிள்ளை (24%) அளவீட்டிற்கு முந்திய மாதத்தில் திடீர் நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

அளவீட்டிற்கு முந்திய மூன்று மாதங்களின் போது சிகிச்சை பெறப்பட்ட விபத்துக்கள் பற்றியும் அளவீடு செய்யப்பட்டது. வீடுகளிலேயே 43 வீதமான விபத்துக்கள் இடம்பெற்றிருந்தது. 15 வயதிற்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளிற்கு இவ் வீதம் இன்னும் கூடவாகும் (57%). விபத்துக்கள் தொடர்பான நோய்கள் ஆனது குறிப்பிட்ட தொழில் வகைகளிற்கு இடையில் மிகவும் அதிகமாக இருக்கின்றது. விபத்துக்குள்ளானவர்களுக் கிடையில் 34 வீதமானோர் தேர்ச்சி பெற்ற விவசாய மற்றும் மீன்பிடி தொழிலாளர்களிலும் 25 வீதமானோர் ஆலை மற்றும் இயந்திர இயக்குனர்கள், பொருத்துனர்களிலும் இருக்கின்றனர்.

அளவீட்டின் முடிவுகளைக் கொண்ட அறிக்கையானது தற்பொழுது திணைக்களத்தின் இணையத்தளமான www.statistics.gov.lk இல் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவலகளிற்கான அமைச்சின் செயலாளர் திரு. எம். ஐ. எம். ரபீக் அவர்களும், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவத்திற்கான அமைச்சின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. பி.ஜி.மகிந்தபால அவர்களும், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. எ. ஜே. சத்தரசிங்க அவர்களும், கொழும்பு மருத்துவ பீடத்தின் பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க அவர்களும், ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் வதிவிடப்பிரதிநிதியான திரு. அலைன் சிபெனலெர் அவர்களும் மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்து விரிவுரையாளர்களும் மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவலகளிற்கான அமைச்சிலும், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்திலும் இருந்து உயர் அதிகாரிகளும், ஆக விழாவில் கலந்து கொண்டிருந்தார்கள்.

கலாநிதி. எ. ஜே. சத்தரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்.